eRIBI







தமிழ்

# பினாங்கில் உள்ள இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கான தரவு சேகரிப்பு அமைப்பு (RIBI)

**RIBI**

இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்கள்

**eRIBI**

பினாங்கில் உள்ள இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கான  தரவு சேகரிப்பு அமைப்புப் பொருளடக்கம்

| | பக்கம் |
| --- | --- |
| முன்னுரை | 4 |
| eRIBI பற்றிய தகவல் | 6 |
| eRIBI செயற்குழு | 8 |
| RIBI வரையறை | 10 |
| RIBI வகைகள் | 11 |
| RIBI அல்லாத வகைகள் | 14 |
| மின் அடைவு பதிவு | 16 |
| e-RIBI அமைப்பின் வழிமுறை | 18 |

# முன்னுரை

முதன்மையாக , இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி முழு பொறுப்புடன் முயற்சி எடுத்து E-RIBI எனும் அமைப்பைத் துவக்கி வைத்த Penang Harmony Corporation (HARMONICO) இயக்கத்துக்கு எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ந்து இவ்வியக்கம் , இஸ்லாம்  அல்லாத வழிபாட்டுத் தலங்களின் (RIBI) தரவுகளையும் தகவல்களையும் இணையம் வழி சேகரிக்கும் திட்டத்தின் அறிமுகம், தற்போதைய காலத்தின் வளர்ச்சியும் மாற்றமும் பெருகி வரும் இலக்கியவியலுக்கு ஏற்ப இருக்கிறது.

துவக்கிவைக்கப்பட்ட இந்த E-RIBI எனும் இயக்கத்தின்  தடம் , பினாங்கு மாநில அரசாங்கம் இஸ்லாம் அல்லாத சமூகத்துடன் இணைந்து , இஸ்லாம் அல்லாதவர்களின் சமய விவரங்களை மிகவும் நேர்த்தியாகவும் முறையாகவும் நிர்வகிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

E-RIBI அமைப்பினை இலக்கவியலாக்குவதன் வழி பினாங்கு மாநிலம் ஓர் உயர்ந்த தகுதியில் நிலைநிறுத்தப்படுகிறது. மாநில அரசு நிறுவன சேவைகளை மக்களுக்கு இலக்கவியலாக்குவதன் வழி அம்மாநில மக்கள் நிலையான நிர்வாகத்திறன்  வெளிபாட்டை உணர்ந்து கொள்ள வழிவகுக்கிறது.



மதிப்பிற்குரிய திரு  சோவ் கோன் யாவ்
பினாங்கு மாநில முதல்வர்

பினாங்கு ஒரு வண்ணமயமான மாநிலமாகும் . இங்கு ஆண்டு முழுவதும் பல மத விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆகவே, பல மதங்கள் பற்றியும் கலாச்சாரங்களைப் பற்றியும் அறிந்துகொள்ள பல வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் , இஸ்லாம் அல்லாத வழிப்பாட்டுத் தலங்களின் தகவல்கள் பதிவு செய்யப்படாததால் அவை ஆங்காங்கு சிதறிக்கிடக்கின்றன.

எனவே, இம்மாதிரியான அறிய தகவல்களை முறையாக ஒருங்கிணைத்து மக்களிடம் சேர்க்கவே E-RIBI எனும் அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

“RIBI” எனும் அமைப்பானது மாநிலத்திலுள்ள இஸ்லாம் அல்லாத மத தகவல்களை மிகவும் நேர்த்தியான முறையில் பதிவு செய்யவும், திட்டமிடவும் மற்றும் தேவைப்படும் உதவிகளைச் செய்யவும் உருவாக்கப்பட்டுள்ளது.


இதன்மூலம் , பினாங்கு மாநிலம் ஒரு திறன் மிகுந்த மாநிலமாக வேண்டும் என்ற இலக்கில் மேலும் பீடு நடை போட E-RIBI மேம்படுவதற்கு மாநில அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற அனைத்துத் தரப்பினரையும்  ஊக்குவிக்க விரும்புகிறேன்.



மதிப்பிற்குரிய திருமதி. சொங் எங்,
பினாங்கு மாநில சமூக மேம்பாடு மற்றும்
இஸ்லாம் அல்லாத தகவல் செயற்குழு தலைவர்

# eRIBI பற்றிய தகவல்

பினாங்கு மாநிலத்தில் உள்ள இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களின் அமைப்பு (RIBI) சமய தரவு மற்றும் தகவல்களை விரிவான, முழுமையான மையப்படுத்தப்பட்ட முறையில் சேகரிக்கும் ஓர் அமைப்பாகும் . “RIBI” அமைப்பு Negeri Pintar dan Hijau, Berteraskan Keluarga Inspirasi Negara எனும் பினாங்கு மாநிலத்தின் 2030 ஆம் ஆண்டு கருப்பொருளை நோக்கி நடைப்போடுகிறது.









## பினாங்கு மாநில அரசு

i. முக்கியப் பதிவுகளைச் சேகரிக்கவும் “RIBI” அமைப்பின் தரவைச் சரிப்பார்க்கலாம்.
ii. “E-RIBI” அமைப்பின் மூலம், ஒதுக்கீடு விண்ணப்பங்களைப் பெறவும் ஒப்புக் கொள்ளவும்; மற்றும்
iii. RIBI” தரவுத்தலம் பதிவு சான்றிதழ் மற்றும் “RIBI” மூலம் பெறப்பட்ட ஒதுக்கீடு பதிவுகளைக் காணலாம்.

## இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்கள்

i. “E-RIBI” அமைப்பின் வழி “RIBI” தரவைப் புதுப்பிக்கலாம் .
ii. “E-RIBI” அமைப்பின் மூலம் தங்கள் வழிபாட்டுத் தலங்களின் ஒதுக்கீட்டு விண்ணப்பம் செய்யலாம்.

## குடிமக்கள்

i. “RIBI” தரவுத்தலத்தின் வழி தங்களின் இருப்பிடத்திலிருந்தே , இஸ்லாம் அல்லாத வழிப்பாட்டுத் தலங்களின் அடிப்படைத் தகவல்களை அறிந்து தெளிவு பெறலாம்.
ii. பினாங்கு மாநிலத்தில் இஸ்லாம் அல்லாத பிற மத விவகாரங்களைப் பற்றிய அறிவிப்புகள், சமீபத்திய தகவல்களை “RIBI” தளத்தின் வழி பெறலாம்.

# eRIBI செயற்குழு

## பினாங்கு மாநில சமூக மேம்பாடு மற்றும் இஸ்லாம் அல்லாத தகவல் செயற்குழு

2018 ஆம் ஆண்டில் , பினாங்கு மாநில அரசு, இஸ்லாம் அல்லாத அரசாங்க கூட்ட கவுன்சிலை உருவாக்கியது. அதன் பின்னர், இஸ்லாம் அல்லாத விவகாரக் குழுவாகப் பெயரிடப்பட்டது. இந்தப் பெயர் மாற்றம் கோவிட் 19 பெறுந்தொற்றுக்குப் பிந்தைய பொருளாதார மீட்சி மற்றும் பினாங்கு 2030 தின் அடைவு நிலையை விரிவுபடுத்துவதற்கான வழியாகவும் அமைந்துள்ளது.

இஸ்லாம் அல்லாத விவகாரக் குழு தற்போது மதிப்பிற்குரிய திருமதி.சொங் எங் தலைமையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இஸ்லாம்  அல்லாத விவகார அமைப்பின் கீழ் உள்ள பொறுப்புகள்  பின்வருமாறு:

i. பினாங்கில் இஸ்லாம்  அல்லாத மத விவகாரங்களின் நிர்வாகத்தின் வளர்சிசியினைக் கண்காணித்தல்.
ii. பினாங்கு மாநில அளவில்  இஸ்லாம் அல்லாத மத விபரங்கள் தொடர்பான மாநில அரசின் கொள்கைகளைத் திட்டமிடுதல், உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்.
iii. பினாங்கில் இஸ்லாம் அல்லாத மத  விவகாரங்கள் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்கவும் அரசு சார்பற்ற இயக்கங்களின் ஈடுபட்டை ஊக்குவித்தல்
iv. இஸ்லாம் அல்லாத மத பண்டிகைகளைத் திட்டமிட்டு செயல்படுத்துதல்.
v. பினாங்கு மாநில சமுதாயத்தினரிடையே மத நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

# HARMONICO

## பினாங்கு ஹார்மனி கார்ப்பரேஷன் - ஹார்மோனிகோ

பினாங்கு ஹார்மனி கார்ப்பரேஷன் - ஹார்மோனிகோ (HARMONICO) மார்ச் 2021 -ல் நிறுவப்பட்டது. இஸ்லாமியம் தவிர வேறு மதத்தினரின் அலுவல்கள் தொடர்பான விஷயங்களைச் செயல்படுத்தும் கார்ப்பரேஷனாக செயல்படுகிறது. மத சார்பற்ற விவகாரங்கள், கொள்கைகள், ஆன்மீக புரிதல் ஆகியவற்றை உள்ளடக்கிய சமூகத்தின் அடித்தளமாகும். ERIBI அமைப்பு ஹார்மோனிகோவால் நிர்வகிக்கப்படும். அனைத்துத் தகவல் மற்றும் இந்த அமைப்பின் கீழ் உள்ள தரவு பினாங்கு மாநில அரசின் தனியுரிமமாகும் .



Rumah Ibadat Bukan Islam

## RIBI இன் விளக்கம்

i. RIBI என்பது முஸ்லீம் அல்லாத மத நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுமக்களுக்கு வழங்கப்படும் வழிபாட்டுத் தலமாகும்.

ii. இந்த வழிபாட்டுத் தலம் கட்டிட வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் மதத்தைப் பின்பற்றுபவர்கள், தங்கள் பிராத்தனைகளையும், மத விழாக்களையும் கொண்டாடலாம்.

iii. மதத்தைப் பின்பற்றுபவர்கள் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே RIBI துவக்கப்பட்ட முக்கிய நோக்கமாகும். மதத்தைப் பின்பற்றுபவர்கள் , தேவைக்கேற்ப தங்களின் மத நடவடிக்கைகளை அங்கு மேற்கொள்ளலாம். மற்றும் , ஒரே மத நம்பிக்கைக் கொண்டவர்களோடு பழகலாம்.

iv. RIBI அமைப்பின் வழியைப் பின்பற்றுபவர்கள், ஒருவருக்கொருவர் தங்கள் மதம் சார்ந்த விவரங்களைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்பை அமைத்துக்கொடுக்கிறது.


v. RIBI தளங்கள் பாரம்பரியம் அல்லது கட்டிட கலை போன்ற ஈர்ப்பு மதிப்பு கொண்டிருப்பதால், மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டுமின்றி சுற்றுலாப் பயணிகளுக்கும் உகந்த இடமாக அமைந்துள்ளது.

vi. அத்தகைய கட்டிடங்கள் அவசியம் அடுத்த தலைமுறைக்காக பாதுகாக்கப்பட வேண்டும்.

vii. எனவே, RIBI சரியான தேவையின் அடிப்படையில் திட்டமிட்டு உருவாக்கப்பட வேண்டும்.

viii. ஆதரவாளர்கள் மத நடவடிக்கைகளை வசதியாக மேற்கொள்வதற்கும், சமூகத்தின் ஆன்மீக நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் இம்மாதிரியான அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும்.

## வகைகள்





### பௌத்த கோவில்

பௌத்த கோவில்கள் ஹான் சீன மகாயானம் பாரம்பரியம், வஜ்ராயனா திபெத்திய பாரம்பரியம், மற்றும் இலங்கையின் தேரவாத பாரம்பரியம் கொண்டவையாகும். இது பௌத்த சமயத்தவர் தங்களது சமய நிகழ்வுகளையும் தங்கள் சமயத்தை பற்றியும் அறிந்துகொண்டு அமல்படுத்தும் ஒரு இடமாக அமைகின்றது. இது பௌத்த துறவிகள் தங்கும் இடமாகவும் அமைகின்றது. இதில் பாலர் பள்ளியும் அமைக்கப்பட்டுள்ளது.

### தாவோ கோவில்

தாவோ மதத்தின் வழிபாட்டு இடம் சீன மொழியில் “டாவோ குவான்” “观” என்றும் ஹொக்கியனில் “ஆங் காங் கெங்” என்று அழைக்கப்படுகிறது. “மியாவ்” (கோவில்), “காங் 宫” (அரண்மனை), “ஃபு”(பெரிய / ஆடம்பரமான வீடு) அல்லது“ டாங் ”(முன்னணி) என மலேசியாவில் உள்ள தாவோயிஸ்ட் கோவில்கள் அழைக்கப்படுகிறது. இந்தக் கோவில் அதன் நடுப்புறத்தில் திறந்த வெளியாக இருக்கும். இது சீனர்களின் பாரம்பரியத்திற்கு ஏற்றபடி வடிவமைக்கப்பட்டுள்ளது. மலேசியாவை பொருத்தமட்டில் இக்கோயில் பல வடிவங்களிலும் அளவுகளிலும் தாங்கள் வழிபடும் தெய்வத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது.

## வாட் சியாம்



இது சியாம் இனத்தைச் சேர்ந்த புத்த மதத்தவரின் வழிபாட்டு இடமாகும். தாய்லாந்து மொழியில் புத்த கோவில் wat என்று அழைக்கப்படுகின்றது. மலேசியாவில், சியாமிய பாரம்பரியத்தின் பெரும்பாலான பௌத்தர்கள் மலேசியாவில் வாழும் மலேசிய பூமிபுத்ராக்களும் உள்ளடங்கியுள்ளனர்.

## இந்து கோவில்



இஃது இந்து வழிபாட்டுத் தலம். இந்து மதம் மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் பல பிரிவுகளாகவும் பல தெய்வங்களைக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. பிரம்மா, விஷ்ணு , சிவன் ஆகியோரை மும்மூர்த்தி அல்லது திரிமூர்த்தி என்று குறிப்பிடுகின்றார்கள். பிரம்மா படைக்கும் கடவுளாகவும், விஷ்ணு காக்கும் கடவுளாகவும், சிவபெருமான் அழிக்கும் கடவுளாகவும் குறிப்பிடுகின்றார்கள். இந்து சமயம்  சமயத்தில் பற்பல பிரிவுகள் உண்டு. சைவம், சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயப் பிரிவாகவும், வைணவம் விஷ்ணுவையும், சாக்தம் சக்தியை,  கௌமாரம் முருகனை வணங்கும் சமயப் பிரிவாகவும், ஸ்மார்த்தம்  சிவன், சக்தி, விஷ்ணு, கணேசர், சூரியன் மற்றும் முருகனை வணங்கும் சமயப் பிரிவாகவும் விழங்குகின்றது.

## தேவாலயம்



இது கிறிஸ்துவ சமயத்தவரின் வழிபாட்டுத் தலமாக அமைகின்றது. இதில் கிறிஸ்தவ மதம் தொடர்பான நிகழ்வுகள் நடைபெறும். தங்களின் மதத்தைப் பற்றி கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ளும் தளமாக இது அமைகின்றது. தேவாலயங்களின் கட்டிட அமைப்பு அவர்களின் சரித்திரம் மற்றும் பாரம்பரிய கூறுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

## குருத்வாரா



இது சீக்கிய சமயத்தவரின் வழிபாட்டுத் தளமாகும். இந்த பெயரின் அர்த்தம் குருவை அடையும் கதவு என்பதாகும். இவர்களின் நம்பிக்கைப்படி கடவுள் என்பவர் ஒருவரே, அவர் waheguru. இவர்களின் நம்பிக்கைப்படி கடவுளுக்கு எந்த ஒரு உருவமும் கிடையாது. இவர்கள் மனிதர்களிடையே பேதத்தை மறுப்பவர்கள். இவர்களின் வாழ்க்கை குறிக்கோள் மோட்ச நிலையை அடைந்து பிறவாமையை அடைவதாகும்.

## RIBI அல்லாத வகைகள்




### குல வீடு

இது மற்ற வழிபாட்டுத் தலங்களைப் போலவே செயல்படக்கூடியது. இது சமய நிகழ்ச்சிகள் நடத்தப்படும் இடம் அல்ல மாறாக ஒரு குறிப்பிட்ட அமைப்பு ஒன்று கூடும் இடமாகவும் அதன் நடவடிக்கைகளை செய்யும் இடமாகவும் அமைகின்றது. இவ்விடம் அந்தக் குறிப்பிட்ட அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் ஆனது. இவ்விடம் முன்னோர்களின் வழிபாட்டிற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.



## திண்ணை

இது கடவுளின் சிலைகளை வைக்கும் இடமாகும். இது வழிபாட்டு இடமாகும் இது மற்ற சமயத்தவர்களிடமும் ஒத்துப் போகின்றது.



## மயானம் அல்லது கல்லறை

ஒவ்வொரு கல்லறையிலும் வழிபடுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டு இருக்கும். இது கல்லறைகளை பாதுகாக்கும் சிறு தெய்வங்களுக்கு மரியாதை செலுத்தும் வண்ணமாக அமைகின்றது. இது இறந்தவர்களின் நினைவு நாளன்று நடத்தப்படுகின்றது.



# மின் அடைவு பதிவு



## அடிப்படை தகவல்

1

1. மலாய் மொழியில் பெயர்
2. தாய் மொழியில் பெயர்
3. வீட்டு முகவரி
4. வட்டாரம்
5. சட்டமன்றம்
6. பாராளுமன்றம்
7. முகிம் / பிரிவு

## RIBI தகவல்

2

1. பிரிவு
2. சமயம்

## மேலாண்மை தகவல்

3

1. அமைப்பின் பெயர்
2. பதிவு நிறுவனம்
3. பதிவு எண்
4. தலைவர் பெயர்/செயலாளர் பெயர்
5. தலைவர் பெயர்/செயலாளர் கை தொலைபேசி எண்
6. கணக்காளர் பெயர்
7. வங்கியின் பெயர்
8. அமைப்பின் வங்கி கணக்கு எண்

## கூடுதல் தகவல் 4

1. சேவை/நடவடிக்கைகள் (பட்டியல்)
2. பண்டிகைகள்
3. பின்னணி / சரித்திரம்
4. தோற்றுவிக்கப்பட்ட வருடம்
5. தொலைபேசி எண்
6. மின்னஞ்சல் முகவரி
7. இணைய முகவரி
8. சமூக வலைத்தளங்களின் முகவரி
9. மதப் பிரிவு
    i. பௌத்தம் (உதாரணம்: தேரவாதம், மகாயானம், வஜ்ரயானம்)
    ii. தாவோயிசம் (உதாரணங்கள்: குவான் யின், டா போ காங், ஜியு வாங் யே)
    iii. இந்து (உதாரணம்: மாரியம்மன், சுப்பிரமணியன், விஷ்ணு, சிவன், விநாயகர், முருகன்)
    iv. கிறிஸ்தவர் (உதாரணம்: ரோமன் கத்தோலிக்க, ஆங்கிலிகன், பெந்தேகோஸ்தே, மெதடிஸ்ட், பாப்டிஸ்ட், சகோதரர்கள், பிரஸ்பைடிரியன், லூத்தரன்)
10. செயல்படும் நேரம் (நாள், துவங்கும் நேரம், முடியும் நேரம்)
11. பொது அணுக்கள்


## நில தகவல 5


1. நில உரிமையாளர்
2. நில பயன்பாட்டு முறை
3. கட்டிட வகை
4. கடிதத்தின் நிலை
5. நில எண்

## பதிவேற்றம் செய்க 6

1. சிறு உருவ வரைபடம்
2. RIBI படம்
3. பதிவு பத்திரம்
4. வருமான வரி கட்டிய ரசீது

# e-RIBI அமைப்பின் வழிமுறை





“சேர் RIBI” பொத்தானைக் கிளிக் செய்யவும்
“மானியம்” பொத்தானைக் கிளிக் செய்யவும்
பாரத்தைப் பூர்த்தி செய்க
“சேமி “ என்பதைக் கிளிக் செய்யவும்
ஒப்புதல் மின்னஞ்சலுக்காகக் காத்திருக்கவும்




eribi.gov.my

**Penang Harmony Centre**
No. 15, Jalan Scotland,
10450 George Town,
Pulau Pinang

04 - 226 1582
info@harmonico.my
harmonico.my





PENANG 2030

PENANG